
# International *Thirukkural* Conference on Human Dignity

February 1-2, 2026

# PROCEEDINGS



University of Vavuniya, Sri Lanka
International Thirukural Foundation, Mauritius

# Thirukkural on Human Dignity

**February 1-2, 2026, at Vavuniya University, Sri Lanka**

Research Papers submitted to the International Thirukkural Conference on Human Dignity


Editors

**Prof. Panch. Ramalingam**
Pondicherry University
General Secretary, ITF, Mauritius

**Prof. S. Ravi**
Dean, School of Humanities and Social Sciences
Central University of Tamil Nadu, Thiruvarur

**Dr. Ravinthirakumaran Navaratnam**
Senior Lecturer
Department of Business Economics
University of Vavuniya,Sri Lanka
Organising Secretary



Organised by **International *Thirukkural* Foundation,** Mauritius
in collaboration with**Vavuniya University,** Vavuniya, and
**International Tamil Cultural Centre,** Jaffna, Sri Lanka

# Thirukkural on Human Dignity

Published by

Tamil Puduvai
No. 17, 14th Street, Krishna Nagar
Puducherry - 605 008

Editors

**Prof. Panch. Ramalingam**
Pondicherry University
General Secretary, ITF, Mauritius

**Prof. S. Ravi**
Dean, School of Humanities and Social Sciences
Central University of Tamil Nadu, Thiruvarur

**Dr. Ravinthirakumaran Navaratnam**
Senior Lecturer
Department of Business Economics
University of Vavuniya, Sri Lanka
Organising Secretary

ISBN : 978-93-49673-80-9

Pages : lx + 392

First Edition : 2026

Distributed by
**The International Thirukkural Foundation**
**Mauritius**

22. திருக்குறளில் சமண மெய்யியலும் அற ஒழுக்ககோட்பாடுகளும்:அறவியல் விமர்சனக் கோட்பாட்டு நோக்கு செல்வி க.சிந்துஜா (உதவி விரிவுரையாளர்) மற்றும் க.அருந்தாகரன் 141

23. திருக்குறளும் பிளாட்டோவின் குடியரசும்: தத்துவார்த்த ஆட்சிமுறை குறித்த ஒப்பாய்வு – வே. குணரத்தினம் 143

24. திருக்குறள் உணர்த்தும் மனிதநேய மாண்புகள் – கலைமாமணி. முனைவர். அரங்க. முருகையன், 162

25. திருக்குறள் வெளிப்படுத்துகின்ற முகாமைத்துவ செயல்திறன் மற்றும் வர்த்தக வினைத்திறன் தொடர்பான ஓர் சிறப்பாய்வு – கலாநிதி. செ. குணபாலன், க. மோகனம்பாள் 167

26. திருக்குறளில் மருத்துவக் கோட்பாடுகள் – ச.இரவி 176

27. திருக்குறளில் வேளாண் நிலைத்தன்மை மற்றும் இயற்கை வேளாண் சிந்தனைகள் – ப. வேல்முருகன் 180

28. திருக்குறளும் பசுமை உலகமும் – கௌசல்யா சின்னையா பிள்ளை 187

29. திருக்குறள் காட்டும் மனித – இயற்கை ஒன்றிப்பு : சுற்றுச்சூழலியல் அடிப்படையிலான ஆய்வு – சஞ்சீவி சிவக்குமார் 190

30. திருக்குறளும் வாழ்வியலும் – ச.சுபாஷ் 19

31. கண்ணியம் : தமிழ் இலக்கிய அறத்தின் அடிப்படை – முனைவர் ச. திருநாவுக்கரசு 20

32 திருக்குறளில் கருத்திடப்படும் மனித மாண்பு பற்றி கருத்தியல்களின் தற்காலத்திற்கான பொருத்தப்பாடு யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட உள்ளாட்சி சபைகளை மையப்படுத்திய சமகால ஆய்வு. 21

33. திருக்குறளில் இன்றைய மேலாண்மை – இரா. மனநாதன் 21

34. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ஒரு நோக்கு – முனைவர் முருகு தயாநிதி மற்றும் ஆ. யோகராசா 24

35. ஒளி தொழுது ஏத்தும் உலகு – முனைவர் மா. சிதம்பரம் 2

36. திருக்குறளில் பெண்ணியம் – பொ. சத்தியநாதன் 2

37. திருக்குறள் உணர்த்தும் கல்வி சிந்தனைகள் – ப.ஜாகிர் உசேன் 2

38. திருக்குறள் காட்டும் சட்ட உரிமைகள் – முனைவர் அ. கஸ்தூரி 2

39. திருக்குறளில் வலியுறுத்தப்படும் உழவர் மேன்மையும், பிற்காலத்தில் ஏற்பட்ட உழவரின் இழிநிலையும் – தே. ராஜசேகரன் பி.இ., 2

40. திருக்குறளில் வணிக மேலாண்மைகோட்பாடுகள் – ந.வாசு மற்றும் பேரா . ச. இரவி 2

41. திருக்குறள் காட்டும் துறவற நெறிகள் – கதிர் செல்வம் .ப. 2

42. திருக்குறள் கூறும் வாழ்வியல் நெறிகளின்படி காரைக்காலம்மையாரும் அவரின் படைப்பிலக்கியங்களும் –ஒப்பீடு – பாரதி. சா, – பேரா. ச. இரவி 2

43. வள்ளுவரின் இல்லறவியல் சிந்தனைகள் – சி.அரவிந்தகுமார் – பேரா . ச.சுபாஷ் 2

44. திருவள்ளுவர் குறிப்பிடும் மனிதவாழ்க்கையின் உயிர் – வீ.கோவிந்தராஜ் 29

45. திருவள்ளுவரின் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள் – திருமதி அனுராதா – முனைவர் பொ. குபேந்திரன் 30

# 45

# திருவள்ளுவரின் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள்

திருமதி அனுராதா – முனைவர் பொ குபேந்திரன்,
தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 600117.

**முன்னுரை:**

காலந்தோறும் பல்வேறு இலக்கியங்கள் தோன்றினாலும் என்றும் அழியாத மெய்ப்பொருள் கொண்டு நிலைத்து நின்று காலம் இனம் மதம் மொழி என அனைத்தையும் கடந்து உலகப் பொதுமறையாகத் திருக்குறள் திகழ்கிறது. மேலும் இந்நூல் மனிதனை மனிதனாக மாற்றும் வாழ்வியல் நூல் எனலாம். ஒட்டுமொத்த உயிர்களுக்குமான பல் உயிர்களுக்குமான வாழ்வியலைப் போதிக்கும் அறநூலாக திருக்குறள் திகழ்கின்றது. பிறருக்கு நினைவாலும் துன்பம் எண்ணாது வாழ வேண்டும் என்றும் மேலும் உயிரைவிடவும் ஒழுக்கமே உயர்வானது என்னும் அறத்தினையும் போதிக்கும் நூலாக இன்நூல் உள்ளது. இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெறும் பேறு. உயர்ந்தோங்கிய மலைகள், காடுகள், பசுமைப் புள்வெளிகள், நீர் நிலைகள், வயல் வெளிகள், பசுமையான தோப்புகள் என இயற்கையின் கொடைகள் கணக்கிலடங்காதவை. அவற்றை உரிய வகையில் பயன்படுத்திப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு அளிப்பது நமது தலையாய கடமை ஆகும்.

**திருக்குறள் பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்து:–**

திருக்குறள் பற்றிப்பேசாத புலவரில்லை, எழுதா அறிஞர், எழுத்தாளர் இல்லை. தன் தோற்றத்தால் தமிழ் நாட்டுக்கு உலகப் பெரும் புகழைப் பெற்றுத்தந்த சிறந்த நூல், திருவள்ளுவரின் திருக்குறள்.

> **ஒன்றே பொருளெனின் வேறென்பர் வேறெனின்**
> **அன்றென்பர் ஆறு சமயத்தார் நன்றன.**
> **எப்பாலவரும் இயைபவே வள்ளுவனார்**
> **முப்பால் மொழிந்த மொழி." கல்லாடார்(திருவள்ளுவமாலை)**

மழையானது மக்கள் போற்றி வணங்க வேண்டிய ஒன்று.ஏனெனில் அது உண்ணும் பொருளை உண்டாக்கிக் கொடுத்துத் தானும் உணவாக மாறுகிறது. எனவே சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது ஒவ்வொரு மனிதனின் கடமை என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

–கி.ஆ.பெ. விசுவநாதம்

முதன்மையும் தொன்மையும் வாய்ந்த தமிழர் பண்பாட்டில் உலக வாழ்க்கைக் கூறுகள் கருக்கொண்டன. அக்கரு தெய்வப் புலவராகிய திருவள்ளுவருக்குப் புலனாயிற்று. ஆகவே அவர்பால் உலக நூல் ஒன்று மலர்ந்ததென்க. வள்ளுவரின் பார்வையில் உயிர்ப்பு, உலகம் ஒரு குலம் என்பதே. உலகம் ஓர் குலம் என்பது பழந்தமிழர் பண்பாட்டினின்றும் முகிழ்த்த மிக நவீனமான குறிக்கோள்.

–திரு.வி.க

It is a text book of indispensable authority on moral life. The maxim of valluvar has touched my soul.

-Mahatma Gandhi (Text book on moral life)

காஸ்மோபாலிட்டன் கண்ணோட்டம்:–

அன்பு கருணை ஒழுக்கம் மற்றும் வாழ்வியல் சிந்தனைகளை வெளிப்படுத்தும் உளவியல் நூல். இனம் மதம் மற்றும் காலத்தின் தடைகளைத் தாண்டிச் செல்லும் பிரபஞ்ச பார்வையிலான உலகளாவிய நூல்.

–டாக்டர் வில்ஃபிரைட் நோயல்

ஆய்வு நோக்கம்:

1. திருக்குறளில் காணப்படும் இயற்கை சார்ந்த (நீர், நிலம், காற்று) கூறுகளை அடையாளம் காணுதல்.
2. இயற்கை பற்றியச் சிந்தனையை ஆய்வு செய்து அதன் கருத்துருவாக்கத்தை வெளிக்கொணர்தல்.

சுற்றுச்சூழல்:–

“சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே துணை.” (குறள்–1031)

சுற்றுச்சூழல் என்பது இந்த பூமியை சுற்றியுள்ள இயற்கை மற்றும் செயற்கை பொருட்களின் ஒரு தொகுப்பு. இப்போது இருக்கும் அறிவியல் வளர்ச்சியில் ஒரு பக்கம் நன்மைகள் இருந்தாலும் தீமைகள் சற்று அதிகமாகவே இருக்கிறது என்று சொல்லலாம். இன்றைய காலகட்டத்தில் சுற்றுச்சூழல் சிக்கல்கள் அதிகரித்து வரும் சூழ்நிலையில் இயற்கை குறித்த புரிதல்களையும் அதனை மாசுபடாமல் பேணிக்காக்கும் கடமையும் நமக்குச் சற்று அதிகமாகவே உள்ளன. அதற்கு உதவும் வகையில் நம் முன்னோர்களின் பாரம்பரிய சிந்தனைகளை மீண்டும் ஆராய்ந்து அறிவது அவசியமாகிறது. இந்நிலையில் திருக்குறளில் காணப்படும் இயற்கை குறித்த சிந்தனைகளை எடுத்து இன்றைய நவீன

சூழலின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைப் பரிந்துரைக்கும் நோக்கில் இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகிறது.

**அடிப்படை தேவை:–**

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உண்ணின்." (குறள்–942)

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் என்பது உணவு, உடை, உறைவிடம். இவற்றுள் முதல் இரண்டும் வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை, வேளாண்மையோ நீரையும் நிலத்தையும் அடிப்படையாகக் கொண்டது. எனவே நீர் நிலைகள் மற்றும் நிலங்கள் மாசுபாடு இல்லாமல் இயற்கை முறையில் பாதுகாப்போமேயானால் நோயின்றி நீண்ட காலம் வாழலாம். அனைத்து உயிர்களுக்கும் அடிப்படை வளங்களை வழங்கும் ஆதாரமாக இயற்கையே உள்ளது. இயற்கை உலகின் அனைத்தும் உயிர்களுக்கும் கடவுள் அருளிய சிறந்த பரிசாகும். தெளிந்த நீர், தூயகாற்று, ஆரோக்கியமான உணவு போன்றவற்றை வழங்கும் ஆதாரமாக இயற்கை உள்ளது. இது மனித வாழ்வில் ஓர் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

இன்றைய நவீன சூழலில் காடுகள் அழிப்பு, நீரோடைகள் மாசுபாடு போன்ற செயல்கள் நிலத்தைப் பாதிப்பதோடு மட்டும் அல்லாமல் சுற்றுச்சூழலையும், பாதித்துப் பேரழிவுகளையும் நோய்களையும் உருவாக்குகின்றன. எனவே ஐம்பூதங்களை மதித்து உயிரினங்களின் வாழ்வுரிமையைக் காத்துச் சுற்றுச்சூழலைப் போற்றுவதன் மூலம் உலகின் சமநிலையை நிலை நிறுத்த முடியும்.

**புவியின் இயக்கம்:–**

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்"

இப்பூமியானது 400 மில்லியன் வருடங்களுக்கு முன் உருவாகியதாகச் சொல்லப்படுகிறது. பூமியில் இடம் பெறும் ஒவ்வொரு இயக்கமும் இயற்கையை சார்ந்தே அமைகின்றது. தரைச்சூழல் உயிரினங்கள் வாழ்வதற்கும் காடுகள் சுவாசிக்க ஆக்சிஜனையும் வளிமண்டலத்திற்கு நீராவியைத் தந்து மழையையும் தருகிறது. இச்சூழலியல் சரியாக இயங்குவதால் தான் வாழ்வியல் வட்டம், நீரியல் வட்டம், உணவு வட்டம், கார்பன் வட்டம் எனப் பல சூழல் சமநிலைச் செயற்பாடுகள் சீராக இயங்கிக்கொண்டிருக்கின்றன. இதற்கு முதல் ஆதாரமாக நீரைக் குறிப்பிடலாம். அத்தகைய முதன்மை ஆதாரத்தைக் குறித்து வள்ளுவர் குறிப்பிடும் கருத்துக்களை இக்கட்டுரையில் பார்ப்போம். திருவள்ளுவர் தனது குறளில் "வான்சிறப்பு" என்னும் அதிகாரத்தின் மூலமும் "உழவு"என்னும் அதிகாரத்தின் மூலமும் நீர் நிலைகள் எவ்வளவு முக்கியம் என்பதையும் அதனை எவ்வாறு போற்றுதல் வேண்டும் என்பதையும் அவையே மனித வாழ்வின் அடிப்படை ஆதாரம் என்பதையும் குறிப்பிட்டுக் கூறியுள்ளதை இக்கட்டுரையில் காண்போம்.

திருக்குறளில் (மேலாண்மை):-

...(மேலாண்மை) வான்சிறப்பு என்னும் அதிகாரத்தை அமைத்திருப்பதின் மூல
...வாழ்த்திற்குப் பின் வான்சிறப்பு ... அடுத்த நிலையில் மழை என்று அதன் முக்கியத்துவத்தைக் காட்ட வேண்
...அமைத்துள்ளார். பூமியின் செழுமைக்கான காரணம் மழையே. உயிர்களி
...நீர் மழை ஆகியவை இல்லை என்றால் ஒழுக்கம் நிலைபெறாது (குறள் 2
...உலகம் நிலைத்து நிற்கிறது. அதனால் மழையை அமிழ்தம் எ
...கூறுகிறார் (குறள் 15). பூமியைப் பல வளங்கள் கொண்ட ஓர் அரிய இருப்பிடம
...அதன் வளமைக்குக் காரணமாகிய மழையையும் நீரையும் போற்றிப் பாடுகிறது.

**"வானின்று உலகம் வழங்கி வருவதால்**
**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று." (குறள்–9)**

மனிதர்களுக்கு மட்டும் அல்ல விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என்று அனை... உயிர்களுக்கும் மழை வேண்டும் என்று கூறுகின்றார். அமிழ்தம் உண்டவ... மாட்டார்கள் அவர்களின் உடலும் உயிரும் ஒன்றாகவே இருக்கும். அது ... உயிர்களும் இந்தப் பூமி இருக்கும் வரை இருக்கும். அதனைத் தூய்மை... பேணிக்காப்பது நமது கடமை என்று கூறுகிறார்.

**"ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்**
**வாரி வளங்குன்றிக் கால்."(குறள்–14)**

புயல் என்று அழிக்கும் வெள்ளப்பெருக்கு தனது தன்மையை இழந்தால் உ... உழுவதை நிறுத்துவார்கள். அதுபோல இயற்கை மாசுபாடு அதிகரித்தால் ம... வாழ்நிலை துன்பத்திற்கு உள்ளாகும் என்று குறிப்பிடப்படுகிறது.

**"விசும்பின் துளிவீழின் அல்லால்மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது". (குறள்–11)**

சிறு துளிகள் என்னும் மழைதுளி இல்லை எனில் புல் கூட முளைக்காமல் பே...

**"நீரின்று அமையாது உலகெனின்**
**யார் யார்க்கும்". (குறள்–12)**

நீரின்று அமையாது உலகம் என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவு செ... வள்ளுவர். நீரே மனித வாழ்வின் அடிப்படை என்பதால் நம் முன்னோர்க... ...மையான நீர்நிலை வடிவங்களை உருவாக்கி நீரைப் பாதுகாத்தனர். அகழி, அ... ...உறைகிணறு, அணை, ஏரி, குளம், ஊருணி, கண்மாய், கேணி எனப் பல்வேறு நீர்நிலைகள் அமைத்து அதனைத் தூய்மையாகப் பாதுகாத்தனர்.

ஒவ்வொரு ஆண்டும் பெய்கின்ற மழையின் அளவு கூடுதலாகவோ கு... இருக்கலாம். ஆனால் மழை வழங்கிய நீரை நீர் நிலைகளே பாதுகாத்துத் ... ...மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க் கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப்பெருந்துண...

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம். இ... ...ரண்டும் வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை. வேளா... ஆதாரமாகக்கொண்டது.

மழை நீர், ஆற்று நீர், ஊற்று நீர் ஆகிய சிறிய சிறிய நீர் நிலைகளில் இருந்து வரும் நீரை வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை நம்முன்னோர்கள் திட்டமிட்டுச் செய்துள்ளனர்.

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்" (742)

ஒரு நாட்டின் வளமெனப்படுவது அங்கு உள்ள சூழ்நிலையைக் குறிப்பதாகும். பூமியின் சுற்றுச்சூழல் குறித்து மணி போல் தெளிந்த நீரும் வெட்ட வெளியான நிலமும் மலையும் அழகிய நிழல் உடைய காடும் ஆகிய இவை நான்கும் உள்ளதே அரண் ஆகும் என்று பூமியின் நிலைகளன்களாகத் வள்ளுவர் சிறப்பித்துக் கூறுவதை குறள் 742-ன் மூலம் அறிய முடிகிறது. இதனால், நாட்டின் தலைசிறந்த பாதுகாப்புகளுள் நீருக்கே முதல் இடம் தருகின்றார் வள்ளுவர்

உணவெனப்படுவது நிலத்தொடு நீரே (புறம்–18)

என்ற சங்க பாடல்களும் இயற்கையை, நீரின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது. தண்ணீரின் தேவையைப் புரிந்துகொண்ட தமிழர்கள் நீர்மேலாண்மையை அறிவியல் நோக்குடன் கட்டமைத்தனர். அவற்றை இன்றைய காலச்சூழலுக்கு ஏற்ப வளப்படுத்துவது நம் அனைவரின் கடமையாகும்.

**தண்ணீர் ஏன் பாதுகாக்கப்பட வேண்டும்:–**

இன்றைய சூழலில் அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்தோங்கிய நிலையில் தண்ணீர் பஞ்சம் உருவாகத் தொடங்கிவிட்டது. உலக சுகாதார நிறுவணம் உலகம் விரைவில் குடிநீருக்கான சிக்கலை எதிர்கொள்ளும் நிலை வரும் என எச்சரித்துள்ளது. குடிநீரை விலை கொடுத்து வாங்கும் அவல நிலையை மாற்றி அமைக்கும் திட்டத்தை நாம் உருவாக்க வேண்டி உள்ளது. ஆண்டுதோறும் பெய்கின்ற மழையின் மழைப்பொழிவை ஆக்க நிலையில் பயன்படுத்தும் செயல் திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும். அக்காலச்சூழலில் பல அரசர்களும், அறிவியலாளர்களும் நீர் நிலைகளை அமைத்து அதனைப் பேணிக்காத்து எவ்வாறெல்லாம் பாதுகாத்தனர் என்பதை வரலாற்றிலும் இலக்கியத்திலும் கல்வெட்டுகளிலும் உள்ள பல சான்றுகள் மூலம் நாம் அறியமுடிகின்றது. உயிர்ச்சங்கிலி அறுபடாது காக்கும் வகையில் நீர் நிலைகளைப் பாதுகாக்க வேண்டியது நம் தலையாய கடமையாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனைப் பின்பற்றி நம் முன்னோர்கள் நமக்குக் கொடுத்த கொடைகள் எனக் கல்லணை, ஏரிகள், குளங்கள் ஆகியவை அமைந்து அவற்றுள் கரிகாலச் சோழன் கட்டிய கல்லணை மிகவும் சிறப்பு பெற்றுக் காணப்படுகிறது.

இயற்கை நமக்கு கொடுத்த கொடை தண்ணீர். அதனைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதாலேயே நீர்த்தட்டுப்பாட்டைக் குறைக்க முடியும். தண்ணீர் அவசியம். அதனைவிட தூய்மையான தண்ணீர் கிடைக்க நம் முன்னோர்கள் கண்டுணர்ந்த மரபார்ந்த அணுகுமுறைகளைப் பின்பற்றி நீரைப் பாதுகாத்தல் குறித்து விழிப்புணர்வை உருவாக்க வேண்டும்.

இன்றைய நவீன சூழலில் பல தொழிற்சாலைகள் வெளியிடும் மருத்துவ கழிவுகள்
சாயபட்டறைக்கழிவுகள், இதர இரசாயனக்கழிவுகள் மூலம் நீர் நிலைகள் மாசு படாம
பாதுகாப்பது நம் கடமையாகும். அது மட்டும் அல்லாது நீர் தேக்கச் சூழலை உருவாக்க
நாடு வளம் பெற உறுதுணையாக இருக்க வேண்டும்.

**முடிவுரை:–**

திருவள்ளுவர் மழையின் பெருமையை உணர்த்தி அதைத் தெய்வமாகப் போற்
இயற்கையைப் பாதுகாப்பதன் மூலம் மனித வாழ்க்கையை மேம்படுத்த முடியு
என்பதை"வான் சிறப்பு"அதிகாரத்தின் மூலம் விளக்குகிறார். மழைக்கும் மனித வாழ்வி
செழிப்புக்கும் உள்ள பிணைப்பை உணர்த்தும் இயற்கை வளங்களைப் பேணி, வளமா
வாழ்வை அமைத்துக் கொள்வதே வள்ளுவரின் விருப்பமாக இருந்தது. இயற்
வளங்களைப் பேணிக் காப்பது ஒவ்வொரு தனி மனிதனின் கடமையாக வலியுறுத்தி
கூறுகின்றார். மேலும் தனிமனிதன் சமுதாயமாகவும் இணைந்தால்,சமுதாய ஒழுக்கம் ஒ
நல்ல வளமான சமூகத்தை அமைப்பதன் மூலம் சிறப்பான வாழ்வை வாழ முடியும் என்
வள்ளுவ பெருந்தகை குறிப்பிடுகிறார்.உழவின் நண்பனாக உள்ள மாட்டுப் பொங்கல் அன்
வள்ளுவர் தினமாகக் கொண்டாடப்படுவதன் மூலம் வள்ளுவனையும் உழவனையும் ஏற்
சேர்த்துச் சிறப்பித்துப் பார்த்தவன் தமிழன் என்ற பெருமை இங்குக் குறிப்பிடத்தக்கது. நா
இக்கட்டுரையின் மூலம் திருவள்ளுவரை இயற்கை ஆர்வலராகக்காண்கிறேன்.

**பார்வை நூல்கள்:–**


1. திருக்குறள் - புலியூர்க் கேசிகன் - பூம்புகார் பதிப்பகம் புதிய உரை.
2. குறள் அமுதம் - மு. கருணாநிதி.
3. திருவள்ளுவமாலை - மணிவாசகர் பதிப்பகம்.
4. திருக்குறள் கட்டுரைகள் - கி.ஆ.பெ. விசுவநாதம்.


**அடிக்குறிப்புகள்:–**

1. திருவள்ளுவ மாலை - கல்லாடர் - பாடல் எண்-9 பாடியது.
2. திருக்குறள் கட்டுரைகள் - கி.ஆ.பெ. விசுவநாதம்.
3. புதிய உரை - திரு.வி.க.
4. Text book on moral life - Mahatma Gandhi.
5. காஸ்மோபாலிடன் கண்ணோட்டம் - டாக்டர் வில்.ஃபிரைட் நோயல்.
6. திருக்குறள் எண் 1031.
7. திருக்குறள் எண் 942.
8. திருக்குறள் எண் 11.
9. திருக்குறள் எண் 11.
10. திருக்குறள் எண் 14.
11. திருக்குறள் எண் 16.

. திருக்குறள் எண் 20.

. திருக்குறள் எண் 742.

. புறப்பொருள் வெண்பாமாலை பாடல் எண் - 18.